LIBRARY
25 OCT 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 18th July 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (The Hon. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

லைசென்ஸ் இன்ஸ்பெக்டர்கள்

*366 கேள்வி.—திரு. முனு ஆதி (திரு. து. ப. அழகமுத்து சார்பாக) : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா போர்டு சானிடரி இன்ஸ்பெக்டர் யோக்கிய தாம்சமுள்ள லைசென்ஸ் இன்ஸ்பெக்டர்களைப் பொது சுகாதார இலாகாவில் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களாக எடுத்துக்கொள்ள அரசினர் உத்தரவு பிறப்பித்தார்களா ?

(இ) அப்படியானால், அவர்கள் பொது சுகாதார சிப்பந்தி களாகக் கருதப்படுகின்றனரா ?

(உ) ஹெல்த் அசிஸ்டெண்டுகளுக்கு சானிடரி இன்ஸ்பெக்டர் யோக்கியதாம்சம் இருந்தும், அவர்களை அரசினர் சிப்பந்திகளாக எடுக்காததற்குக் காரணமென்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) As there is no separate category of 'Licence Inspectors' under the Panchayat Union Councils and as the former District Board Licence Inspectors became surplus to the requirements of the successor local bodies, these personnel were appointed as Health Inspectors. On the other hand, the category of 'Health Assistants' continues to exist under the Panchayat Union Councils and there was no need to absorb the Health Assistants as Health Inspectors.

திரு. முனு ஆதி : பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை, லைசென்ஸ் முறைகளை சுகாதார அடிப்படையில் பார்த்து அதிகப் பரப்பளவு இருப்பதால் இன்னும் ஒரு அடிஷனல் ஹெல்த் ஸ்டாப் போட்டால் நன்றாக இருக்கும். அரசினர் அபிப்பிராயம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : லைசென்ஸ் இன்ஸ்பெக்டர்களை அப்சார்ப் செய்யக்கூடிய காரியம் அவுட் ஆப் க்வெஸ்டின். ஆனால் ஹெல்த் அஸிஸ்டென்ட்ஸ் என்ற காட்டிகரி இருக்கிறது.